மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.616 /2019

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03–ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பசுருதீன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :சக்கரபாஷா சாயபு | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : | வயது | : 73 /2025 |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

(i) எனது சொந்த ஊர் முகமதுபட்டினம். நானும், நானும், முதலாம் பிரதிவாதியும் சகோதரர். நீங்களும், முகமது அலியும் தாவா சொத்தை முகமது முஸ்தபாவிடமிருந்து கிரையம் பெற்றோம். தாவா சொத்திற்கு கிழக்கே சர்வே எண்.44/1, 44/1ஏ, 44/1பி, 44/1சி ஆகிய சொத்துக்களை கிரையம் பெற்றீர்கள் என்றால் சரிதான். நான் கிரைய வாங்கிய நேரத்தில் சப்டிவிசன் எதுவும் ஆகவில்லை. நான் கிரைய பெற்ற நிலத்தில் சப்டிவிசன் எதுவும் இல்லை. நான் வெளிநாடு சென்றிருந்ததால் சப்டிவிசன் ஆனது தெரியவில்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு புளூ பிரிண்ட், பஞ்சாயத்து முன் அனுமதி ஆகியவற்றை வீட்டில் வைத்திருக்கிறேன். நான் கிரையம் பெற்ற சொத்தை ஆழ்ந்து பார்த்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய காலத்தில் எனது சொத்திற்கு வடக்கே மண்பாதையாக இருந்தது பிற்காலத்தில் ரோடு போடப்பட்டுள்ளது. அந்த சாலை அரசாங்கத்தால் போடப்பட்டுள்ளது. மேற்படி சாலை அமைத்த இடம் உங்களுக்கும் வாதிக்கும் பாத்தியப்பட்ட சர்வே எண்.44/1ஏ என்றால் சரிதான்.

(ii) வழக்கு சொத்தை பொருத்து சப்டிவிசன் செய்யும் போது அதிகாரிகள் விசாரிக்காமல் சப்டிவிசன் செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை இதுவரை நான் அளந்து பார்த்தில்லை என்றால் நான் பார்த்ததில்லை எனது சகோதரர் முகமது கனி பார்த்திருக்கலாம். முதலாம் பிரதிவாதி முகமது கனி நலமுடன் இருக்கிறார் நீங்கள் அதை மறைத்து பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு போடுவதற்கு முன் 1ம் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பினார் என்றால் அப்போது நான் வெளிநாடு சென்று விட்டேன். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் வாதியின் மருமகள் வாங்கிக்கொண்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. உங்களிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்த எனது அண்ணன் மருமகளின் கையெழுத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடந்த 22.12.2015 ல்

நான் இந்தியாவில் இருந்த சமயம் 1ம் வாதிக்கு நான் கேவியட் தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.